**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 20/2021**

**வா.சா.2 – சுப்பிரமணி**

**<u>22–09–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கை முருகன் தாக்கல் செய்துள்ளார். முருகன் எனது தம்பி. முருகன் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் முருகனுக்கு சொந்தமான இடத்தை பிரதிவாதிகள் பாதி சேர்த்து கட்டியதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். முருகனுக்கு சொந்தமான இடம் என்பதை காண்பிக்க சார் பதிவாளர் அலுவகத்தில் முருகன் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மின் ரசீது மற்றும் தண்ணீர் ரசீது தாக்கல் செய்துள்ளேன். சொத்து முருகனுக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்டது. முருகனின் அண்ணன் தம்பிகளான சுப்பிரமணி, கந்தசாமி மற்றும் அப்பா ரங்கசாமி சேர்ந்து முருகனுக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள். அந்த கியைரப்பத்திரத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோமா என்றால் பதிவு செய்யவில்லை, அது புறம்போக்கு நிலம், மூர்த்தி, சின்னான் ஆகியோர்களிடம் இருந்து விலைக்கு வாங்கினோம்.

2. தாவா சொத்து புறம்போக்கு நிலம் என்பதால் முருகனுக்கு வழக்கு போடுவதற்கு உரிமை இல்லை என்றும் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் இடத்திற்கு அருகே தான் பிரதிவாதி இருக்கிறார் என்றால் சரிதான். கடந்த 2003 ம் வருடம் ஏற்பபட்ட தீ விபத்தில் கே.வி.ஆர் நகரில் உள்ள தர்மனின் குடிசையும் எரிந்தது என்றால் தீ விபத்து நடந்தது ஆனால் அவருக்கு வீடு இல்லை, சின்ன சாலை தான் இருந்தது அதுவும் எரியவில்லை. 2003 ம் ஆண்டு ஏற்பட்ட தீ விபத்திற்கு தருமனுக்கு மாவட்ட ஆட்சியரால் நிவாரணம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கிற்காக

தருமனின் குடிசையில் தீ பிடிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மண்டல துணை தாசில்தார் இரண்டாம் பிரதிவாதி சந்திராவிற்கு குடியிருப்பு சான்று வழக்கியுள்ளார் என்றால் சரியல்ல, அதில் மின் இணைப்பு இல்லை.

3. பிரதிவாதி குடியிருந்து வந்தால்தான் குடியிருப்பு சான்று வழங்கப்பட்டுள்ளது என்றும், தீ விபத்து ஏற்பட்டதால் ஏற்கவே கட்டப்பட்ட தற்காலிக குடியிருப்பை அகற்றிவிட்டு புதிய குடியிருப்பை கட்டியபோது தான் வாதி பிரச்சினை செய்ததால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் தீ விபத்திற்கு பின்னிட்டு 2022 ல் வீடு கட்டியபோது தான் பிரச்சினை ஏற்பட்டது அது குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் சொல்லியுள்ள அளவுகள் படி முருகனுக்கு சொத்து உள்ளதற்கு ஆவணம் இல்லை என்றால் வெள்ளத்தில் ஆவணம் கடித்து செல்லப்பட்டது. தாவா சொத்து புறம்போக்கு நிலம் என்றும், முருகன் 40-50 வருடங்கலாக குடியிருந்து வருவதால் உரிமை கோருகிறார் என்றால் சரியல்ல.

4. நான் சொல்வது போல் ஆவணம் இல்லை என்பதால் வெள்ளத்தில் அடித்துச்சென்று விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளோம். நான் சொல்வது போல் மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புறம்போக்கு சொத்து என்பதால் உறுத்து கட்டளை கோருவதற்கு வாதிக்கு நிகாந்தரம் இல்லை என்றும், இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சுவாதீனத்தை சீர்குலைக்கும் நோக்த்துடன் அவர்கள் வீடு கட்டும்போது நாங்கள் அதனை இடித்ததால் தான் தகராறு ஏற்பட்டு புகார் கொடுக்கப்பட்டதால் பொய்யாக

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு அருகதை இல்லாததால் வாதியின் அண்ணனான எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

| |
|---|
| சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.<br><br>ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,<br>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி<br>திருப்பூர். |